# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • செப்டம்பர் 7, 2019

Weekly E-paper • SEPTEMBER 7, 2019


# இந்தியப் பொருளாதாரம்



## உடனடியாக மறுசீரமைக்க இயலாது?

கோ.மால்மருகன்



### பேரவை மாநிலச் செயற்குழு

### ஊர்சுற்றிப் புராணம்

தலையங்கம்

### வங்கிகள் இணைப்பு

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● செப்டம்பர் 7, 2019 Weekly E-paper ● SEPTEMBER 7, 2019


# இந்தியப் பொருளாதாரம்

## உடனடியாக மறுசீரமைக்க இயலாது?

● கோ.மால்மருகன்

***கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.***

இக்குறளின் பொருள் “நாட்டின் நிலையை கலந்தாராயாமல் கொடுங்கோல் புரியும் மன்னன், தன் நாட்டின் நிதி ஆதாரத்தையும் தன் மக்களின் நன்மதிப்பையும் இழப்பான்” என்றாகும். மோடிக்கு இந்தக் குறள் பொருந்துமா என்று இக்கட்டுரையின் இறுதியில் நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுமத்தின் உறுப்பினரான திரு. ரத்தின் ராய் என்பவர் கடந்த மே மாதம் NDTVக்கு அளித்த பேட்டியில், இந்தியாவின் பொருளாதாரம் வரவிருக்கும் நாட்களில் “நடுத்தர வருமானப் பொறி”யில் சிக்கி, இந்தியாவும் பிரேசில் மற்றும் தென் ஆப்ரிக்கா நாடுகளைப் போல் சமுதாயச் சீரழிவுகளை எதிர்கொள்ளவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படலாம் என்றார். ஒரு நாடு நடுத்தர நாடாகிய பிறகு (சராசரி தனிநபர் ஆண்டு வருமானம் USD 1000 முதல் 12000 வரை; இந்தியா : USD 2020) அதன் வளர்ச்சி விகிதம் வளராமல் பல ஆண்டுகளுக்கு நிலைத்திருப்பின், அது “நடுத்தர வருமானப் பொறியில்” சிக்கிக் கொண்ட நாடாகக் கருதப்படும். அதாவது, அந்த நாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள், குறிப்பாக ஏழைகள், அவரவர் பொருளாதார நிலையில் சிக்குண்டு குற்றங்களுக்கும் சமுதாய சீரழிவிற்கும் ஆட்பட்டு நெடுங்காலம் வாழ்வார்கள்.

கீழ்வரும் ஐந்து காரணங்களால், ரத்தின் ராயின் முன்கூற்று, இந்தியாவிற்குப் பொருந்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது.

### மோடி அரசின் அடிப்படைக் கூறுகள்

2011-12க்கு பிறகு, நாட்டின் பொருளாதாரம் மந்தநிலை அடையத் தொடங்கியது. மே 2014-ல் ஆட்சியமைத்த மோடி, சில நாட்களிலேயே இதை உணர்ந்திருக்கக் கூடும். தன் அரசால் இந்தச் சரிவை துரித நேரத்தில் சரி செய்ய இயலாது என்றும் அரசுக்குப் புலப்பட்டிருக்கவேண்டும். அந்தக் கால கட்டத்தில்தான் மோடியரசு, நாட்டின் மொத்த உள்நாட்டு உறபத்தியைக் (GDP) கணக்கிடும் முறையை மாற்றியது. இதன் மூலம், பொருளாதாரச் சரிவை புள்ளிவிவரத் துணைக் கொண்டு மறைக்கப் பார்த்தது. இவ்வாறான சூழ்நிலையில், பொருளாதாரத்தை மறுசீரமைக்கவும் கருப்புப் பணத்தை ஒழிக்கவும், பண மதிப்பிழப்புத் திட்டத்தை அமலாக்கியது. இத்திட்டம் படுதோல்வியைத் தழுவியது. அது மட்டுமல்லாமல், சிறிய மற்றும் நடுநிலைத் தொழில் நிறுவனங்கள் இழப்பில் சென்றன. இந்நிலையைச் சீர் செய்ய அடுத்ததாகச் சமச்சீர் வரி (GST) என்னும் புதுவித வரிமுறையை அமலாக்கியது மோடியரசு. இதுவும் படுதோல்வியிலேயே முடிந்தது. இதனால் பல தொழில் நிறுவனங்கள் மூடியே



ரத்தின் ராய்

விட்டன. இந்தச் சூழ்நிலையைச் சரி செய்ய இந்த ஆண்டு, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ரூ 1.76 லட்சம் கோடியை இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து, அரசு ஈவுத்தொகையாகப் பெறப்போகிறது.

அதாவது, ஒரு தவறைச் சரி செய்வதற்கு மேலும் ஒரு பெரிய தவறைச் செய்வது என்பது, இந்த அரசிற்குக் கைவந்த கலையாகும். இவை அனைத்தும் வைத்துப் பார்க்கும்போது, மோடியரசின் அடிப்படைக் கூறுகளை நாம் அறிந்து கொள்ளலாம் மோடியை மட்டுமே மையமாகக் கொண்டு இயங்கும் அரசு இயந்திரம், பெரும்திட்டங்களை முழுவிவரங்கள் அறியாமல் தன்னை நடுநிலைப்படுத்துவதற்காகவே அறிவித்தல், மறைவடக்கப் பண்புகளைக் கள நிபுணர்களைத் தள்ளிவைத்துவிட்டு, தனக்கு “ஆமாம் சாமி” போடும் அரசு ஊழியர்களையும், பணம் படைத்தவர்களையும் அருகில் வைத்துக் கொள்வது மற்றும் பண்டிதர் நேருவைக் காட்டிலும் தன்னுடைய பெயர் காலந்தோறும் வரலாற்றில் நிலைக்க வேண்டும் என்ற பேராவல்!

### பெரும் இழப்பில் உள்கட்டமைப்புத் துறை

இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் பத்து வருடங்களை, இந்திய பொருளாதாரத்தின் பொற்காலம் என்றே அழைக்கலாம். இந்தக் காலகட்டத்தில்தான் உள்கட்டமைப்புத் துறையின் நெடுஞ்சாலை மற்றும் துறைமுகம் சார்ந்த மிகப்பெரிய திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. இதனால் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்தியப் பொருளாதாரம் விரிவடைந்தது. இந்த நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு பல சிறிய மற்றும் பெரிய கட்டுமான நிறுவனங்கள், இத்துறையில் ஒப்பந்தப் பணிகளைப் பெற்றும், முதலீடு செய்தும், தங்களை விரிவுபடுத்திக் கொண்டன. இதற்காக இந்நிறுவனங்கள் பெரிய அளவிலான கடன்களையும் வாங்கின. இவ்வாறான ஒளிமயமான நிலை 2010 க்குப் பிறகு மழுங்கத் தொடங்கியது. லாபம் ஈட்டும் திட்டப்பணிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. கட்டுமான நிறுவனங்கள் நட்டத்தில் மாட்டிக்கொண்டன. பெரும்பாலான நிறுவனங்கள் இப்போது மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன அல்லது மூடப்பட்டு விட்டன. இதன் தொடர்ச்சியாகப் பொருளாதாரச் சரிவும் தொடங்கியது.

இவ்வாறாக ஏற்பட்டுள்ள உள்கட்டமைப்புத் துறையின் வீழ்ச்சியை, அரசு பெருந்தொகையைக் கொண்டு முதலீடு செய்தால்கூட, சரி செய்ய நீண்ட நாட்களாகும். மேலும் இத்துறை சார்ந்த கட்டுமான நிறுவனங்கள் நட்டத்திலிருப்பதால், அவைகளால் பணிகளை எடுத்துச் செய்ய இயலாது. இந்நிறுவனங்களுக்குப் புத்துயிர் கொடுக்கப்பட வேண்டும் அல்லது புது நிறுவனங்கள் இத்துறைக்கு வரவேண்டும். இவை குறைந்த காலத்தில் செயல்படுத்த முடியாதவையே என்பது தெளிவாகிறது.

### மீளாத்துயரில் வேளாண்துறை

கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவின் வேளாண்துறையின் நடப்பு மிகுந்த

கவலை அளித்து வருகிறது. நாட்டின் 49% மக்கள்தொகை வேளாண்துறையை வாழ்வாதாரத்துக்கு நம்பி இருக்கிறார்கள். ஆனால், உள்நாட்டு உற்பத்தித் தொகையில் (GDP) வெறும் 17% தான் வேளாண்துறையின் பங்காகும். இதனால், விவசாயிகளின் வருமானம் பல ஆண்டுகளாகவே குறைந்த அளவிலேயே இருந்து வருகிறது. அரசு கொள்முதல் ஓரளவு உதவி செய்தாலும், பண வீக்கம் கட்டுப்படுத்தும் விதமாக உணவு தானியங்களின் விலை, குறைந்த அளவிலேயே வைக்கப் படுகிறது. நிலைமை தாங்காமல் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் தற்கொலையே செய்து கொள்கிறார்கள்.

சிறு நிலவுடைமை, அதிக அளவில் தண்ணீரை விரையம் செய்தல், குறைவான உற்பத்தித் திறன், தவறான தானியக் கொள்முதல் முறைகள், குறைந்த அளவிலேயே கடைப்பிடித்துவரும் தொழில்நுட்ப முறைகள், இவை அனைத்தும் இந்திய வேளாண்துறையின் முன்னேற்றத்துக்குத் தடைகற்களாக உள்ளன. நம் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சீர் தூக்க வேளாண்துறையில் முதலீடு பன்மடங்கு உயரவேண்டும். ஆனால், இவை அனைத்தையும் செயல்படுத்த நீண்ட காலமாகும் அதாவது 8 முதல் 10 ஆண்டுகள் வரை கூட எடுக்கலாம்.

### பொருளாதாரத்தில் பின்தங்கிய வடக்கு-கிழக்கு மாநிலங்கள்

பொருளாதார ரீதியில் தென் மாநிலங்களும், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களும் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் சமூக சீர்திருத்த இயக்கங்களின் தாக்கத்தினால், இம்மாநிலங்களால், 2000-10 ஏற்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. தேசிய சராசரி தனிநபர் வருமானம் ரூ 126,406 (2018-19)-ஐக் காட்டிலும் இந்த மாநிலங்களின் சராசரித் தனிநபர் வருமானம் அதிகமாக இருக்கின்றது.

இவற்றிற்கு நேரெதிராக, வடக்கு-கிழக்கு பகுதிகளின் மாநிலங்கள் தொடர்ந்து குறைந்த பொருளாதார மற்றும் சமூகக் குறிகாட்டிகளைப் பதிவு செய்துள்ளன. இந்த மாநிலங்களில் இந்தி பேசும் மாநிலங்கள், நிலம் பூட்டப்பட்டுள்ளதால், இவைகளின் வளர்ச்சி வரலாற்று ரீதியாக பின் தங்கியே இருந்து வந்திருக்கின்றது. அவைகளின் தனிநபர் வருமானம் தேசியச் சராசரியை விட மிகவும் குறைவானவை. 2018-இல் உத்தரபிரதேசம் மற்றும் பீகாரின் இந்தக் குறியீடு, முறையே ரூ. 66,000 மற்றும் ரூ 46,000- ஆகவே இருந்தது.

சொல்லப்போனால், தெற்கு-மேற்கு மாநிலங்கள், நாட்டின் பொருளாதாரத்தை இழுத்துச் செல்லும் இயந்திரமாக செயல்படுகின்றன. பின்தங்கிய வடக்கு-கிழக்கு மாநிலங்களை வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்லாவிட்டால், மாநில ஏற்றத்தாழ்வு மற்றும் உள் இடம்பெயர்வு காரணமாக சமூக அமைதியின்மை மற்றும் வன்முறை ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதன் பொருட்டு, நடுவண் அரசும், குறிப்பிட்ட மாநில அரசுகளும் அதிக வருமானம் ஈட்ட, நிர்வாகச் சீர்திருத்தம் செய்வது இன்றியமையாதது.

### தொடரும் சமூக ஒற்றுமையின்மையும் சாதிமத வன்முறைகளும்

பசு பாதுகாப்பு, ஜெய்-ஸ்ரீராம் கோஷம் எழுப்புதல், லவ்-ஜீஹாத் மற்றும் கர்-வாபாசி போன்ற வன்முறை நடவடிக்கைகள் மூலம் முகமதியர்கள், தலித்துகள் மற்றும் மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் கடந்த 6 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. முத்தலாக் மீதான சட்டம் மற்றும் ஹஜ்ஜுக்கான சலுகையை நீக்குதல் ஆகியவை குறிப்பிட்ட சிறுபான்மைக் குழுவை அவமானப்படுத்துவற்காகவே செய்யப்படுகின்றன.

370 வது பிரிவு செயல்படாமலிருக்க மாற்றங்கள் கொண்டு வந்தது, அதன் விளைவாக 70 லட்சம் மக்களை 30+ நாள்களுக்கு சிறைப்பிடித்து வைப்பது, மிகவும் கொடூரமானது. அசாமில் செயல்படுத்தி வரும் என்.ஆர்.சி-யால், 20 லட்சம் மக்கள், குடியுரிமை இழக்க வாய்ப்புள்ளது. இந்தியா முழுவதும் என்.ஆர்.சி செயல்படுத்தும் அச்சுறுத்தலும் வைக்கப்படுகிறது

இவ்வாறாக மோடியரசு, 2019-இல் பெற்ற பெருவெற்றியைப் பயன்படுத்திக் கொண்டு, இந்துத்வா சித்தாந்ததை செயல்படுத்துவதில் பெரும்முனைப்புக் காட்டிவருகிறது. ஒரு வேளை, மோடியரசுக்கு நாடு எதிர்கொள்ளும் பொருளாதார பின்னடைவு குறுகிய காலத்தில் சரி செய்யமுடியாது என்று தெரிந்து இருப்பதால், தன்னுடைய சித்தாந்ததை செயல்படுத்த இவ்வளவு அக்கறை காட்டி வருகிறதோ என்ற அச்சம் எழத்தான் செய்கிறது.

### முடிவுரை

இந்தியாவின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல, மேலும் 10 கோடி முதல் 15 கோடி இந்தியர்கள் வறுமையிலிருந்து வெளியேற்றப்பட்டு, நடுத்தர வருமானக் குழுவில் சேர்க்கப்படவேண்டும். அதுவும் பத்தாண்டு காலத்திற்குள் இந்த இலக்கை அடைய வேண்டும். இதுவே இந்தியரசின் ஒற்றைக் குறிக்கோளாக இருக்க வேண்டும். இது சாத்தியமா என்பது தான் இப்போதைக்கான கேள்வி!

மோடியரசின் அடிப்படைக் கூறுகள், உள்கட்டமைப்பு மற்றும் வேளாண் துறைகள் எதிர்கொண்டிருக்கும் மந்தநிலை, வடக்கு-கிழக்கு மாநிலங்களின் பின்தங்கிய நிலை மற்றும் சமூகத்தின் ஒற்றுமையின்மை மற்றும் சாதி மத வன்முறைகள் ஆகியவற்றை சேர்த்துக் கோவையாக்கிப் பார்த்தால், நமது பொருளாதார மீட்சி, குறுகிய காலத்தில் நடக்க வாய்ப்பேயில்லை என்பதை மறுப்பதற்கில்லை. ரத்தின் ராய் கூறியது போல், இந்தியா "நடுத்தர வருமானப் பொறி"யில் சிக்கிக் கொள்ளவே அதிக வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது!

இப்போது கூறுங்கள், இக்கட்டுரையின் தொடக்கத்தில் இருக்கும் அய்யன் வள்ளுவனின் குறள், மோடிக்குப் பொருந்துமா?

## பெரியாரே வென்றார்!

தந்தை பெரியார் சிலையின் கீழ், 'கடவுள் இல்லை' எனத்தொடங்கும் வரிகளை நீக்க வேண்டும் என்று கோரி, உயர்நீதிமன்றத்தில் தெய்வநாயகம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு, சில நாள்களுக்கு முன்பு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளில் நீதிமன்றம் தலையிடமுடியாது என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் தெளிவாகக் கூறியுள்ளனர்.

40 ஆண்டுகளுக்கு முன்பும் இதே போல ஒரு வழக்கு, கிருஷ்ணமூர்த்தி என்பவரால் தொடுக்கப்பட்டது. அவ்வழக்கை விசாரித்த நீதிபதி எம்.எம்.இஸ்மாயில், 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வழங்கிய தீர்ப்பில், அவ்வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

எத்தனை ஆண்டுகள் ஆனாலும், எத்தனை வழக்குகள் தொடுக்கப்பட்டாலும், இறுதி வெற்றி தந்தை பெரியாருக்கும் அவருடைய கருத்துகளுக்கும்தான்.



ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## பேரவையின் மாநிலச் செயற்குழு









31.08.2019 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு, சென்னையில் நடைபெற்ற, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநிலச் செயற்குழுவிற்குப் அய்யா கயல் தினகரன் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் தோழர் சுப. வீரபாண்டியன் முன்னிலை வகித்தார். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. கடந்த 28 ஆண்டுகளாக வேலூர்ச் சிறையிலிருந்து, இடைக்காலப் பிணையில் வெளிவந்த நளினிக்குத் தங்க இடமளித்த பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் சிங்கராயர் மற்றும் அவர் குடும்பத்தினருக்குப் பாராட்டு.

2. கடந்த பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, டிசம்பர் 22 அன்று, மேற்கு மண்டல மாநாட்டை, கோவை மாவட்டம் சூலூரில் நடத்துவது.

3. பேரவை உறுப்பினர்களின் குடும்ப ஒன்றுகூடல் நிகழ்வை, திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி மலையில், 2020 ஏப்ரல் திங்களில் நடத்துவது.

4. மதவெறிக்கு எதிராகவும், ஜனநாயகத்தைப் போற்றும் வகையிலும் மாவீரன் திப்பு சுல்தானின் பிறந்தநாள் விழாவை, சென்னையில், பேரவைத் தலைமைக்குழு சார்பில் நடத்துவது.

5. அண்மையில் வேதாரண்யத்தில், அண்ணல் அம்பேத்கர் சிலை உடைக்கப்பட்டதையும், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் சிலைகள், தொடர்ந்து சிதைக்கப்படுவதையும் இச்செயற்குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

6. தங்களின் மறைவுக்குப் பின், பேரவையின் உறுப்பினர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்களின் ஆய்வுக்காகத் தங்கள் உடலைக் கொடுக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்வது.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஊர்சுற்றிப் புராணம்

*அண்மையில் முதலமைச்சர் பழனிச்சாமியும், அவருடன் அமைச்சர்கள் விஜயபாஸ்கர், ஆர்.பி. உதயகுமார், எம். சி.சம்பத். ராஜேந்திரபாலாஜி ஆகியோரும் லண்டன், அமேரிக்காவுக்குக் கிளம்பி விட்டார்கள்.*

*ரஷ்யாவுக்குத் தொழிலாளர் நல அமைச்சர் நிலோபர் கபில், இந்தோனேஷியாவுக்கு வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், மொரீஷியசுக்கு செய்தித்துறை அமைச்சர் கடம்பூர் ராஜு, பின்லாந்துக்கு பள்ளிக்கல்வி அமைச்சர் செங்கோட்டையன், சிங்கப்பூருக்கு சட்டத்துறை அமைச்சர் சி.வி. சண்முகம் - உயர்கல்வி அமைச்சர் கே.அன்பழகன், எகிப்துக்கு தமிழ் வளர்ச்சி அமைச்சர் பாண்டியராஜன் என்று 12 அமைச்சர்கள் வெளிநாடுகளில் ஊர் சுற்றக் கிளம்பிவிட்டார்கள்.*

*அதுவும் பதவி பறிபோக இருக்கும் இறுதிக் காலங்களில் மக்களின் வரிப்பணத்தில் இந்தச் சுற்றுலாவை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் இந்த ‘மந்திரிமார்கள்’.*

*தமிழ்நாட்டில் தொழில்கள் முடங்கின. சிறு, குறு தொழில்களும் வேளாண்மையும் அழிந்து வருகின்றன.*

*தமிழகத்தில் முதலீடுகளை ஈர்க்க மாநாடு நடத்திய அதிமுக அரசு அதன் அடிப்படையில், எவ்வளவு முதலீடுகள் வரப்பெற்றன, அவை என்னென்ன தொழிற்சாலைகள், எங்கெங்கே தொடங்கப்பெற்றன போன்ற எந்த ஒரு செய்தியையும் தமிழக அரசு இதுவரை வெளியிடவில்லை.*

*இந்நிலையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்துத் தமிழகம் கொண்டு வருவது போலவும், அன்னிய முதலீடுகள் மூலம் தமிழகத்தில் பட்டி தொட்டி எங்கும் தொழிற்சாலைகளைக் கொண்டுவருவது போலவும், அதன் மூலம் பல்லாயிரம் வேலை வாய்ப்புகள் கொடுப்பது போலவும் பிரச்சாரம் நடைபெறுகின்றன தமிழ்நாட்டில். மக்கள் காதில் பூ சுற்றும் வேலை இது.*

*இவை ஒரு புறம் இருக்க பாஜக அரசின் பிரதமர் மோடி எப்போது பார்த்தாலும் வெளிநாட்டில்தான் சுற்றிக்கொண்டிருக்கிறார். குடிக்கக் கூழ் இல்லை இந்தியாவில். இவர் 7,000 கோடி ரூபாய் ரஷ்யாவுக்குக் கடனாகத் தரபோகிறாராம்.*

*மோடியை ஊர் சுற்ற அனுப்பிவிட்டு ஆர்.எஸ்.எஸ் சமஸ்கிருதத்தை இந்தி வடிவில் நுழைத்து மாநில மொழிகளை அழிக்க முயல்கிறது.*

*எடுத்துக்காட்டாக, தொடர்வண்டித் துறையில் மாநில மொழிகளில் தேர்வெழுதலாம் என்பதை மாற்றி இந்தி-ஆங்கிலம் மொழிகளில்தான் தேர்வெழுத வேண்டும் என்று துறை மூலம் அறிவிக்கிறது. மோடிக்கு இது தெரிந்தும், தெரியாதது போல ஊர்சுற்றிக் கொண்டிருக்கிறார்.*

*ஆனால், தமிழகத்தில் இருக்கும் அமைச்சர்கள் மாநில மக்கள் பிரச்சினையைப் பார்க்காமல், மாநில மொழியைக் காப்பாற்ற முயற்சி செய்யாமல் மக்கள் வரிப்பணத்தில் ஊர்சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது, நாடு அழிவை நோக்கிப் போவதாக மக்கள் கருதுகிறார்கள்.*

*இந்த ஊர்சுற்றிப் புராணம் இவர்கள் பதவி முடியும் வரை தொடருமா, இல்லையா என்பதை யார் அறிவார் ‘பராபரமே’.*

# வங்கிகள் இணைப்பு

## பெருமுதலாளிகளுக்கு இனிப்பு, பொதுமக்களுக்குக் கசப்பு

● மா.உதயகுமார்

பொதுத்துறை வங்கிகள் இணைக்கப்படும் செய்தியை அண்மையில் மத்திய நிதியமைச்சர் திரு. நிர்மலா சீதாராமன் அறிவித்தார். நாட்டில் உள்ள 10 பொதுத்துறை வங்கிகள் (தமிழகத்தில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு சேவையாற்றி வரும் இந்தியன் வங்கி உட்பட) இணைக்கப்பட்டு, 4 பெரிய வங்கிகளாகச் செயல்படும் எனும் அரசின் கொள்கை முடிவினைத் தெரிவித்துள்ளார். பின்னர் இது குறித்துப் பல்வேறு விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வங்கி ஊழியர்கள் சங்கங்கள் இதனைக் கடுமையாக எதிர்க்கின்றன. பொருளாதார வல்லுநர்களும் இதன் மீதான விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றனர். இதனை வேறு வழியின்றி ஆதரித்து ஆக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் கூட இவ்வறிவிப்பை முழுமையாக வரவேற்கவில்லை.

இந்த வங்கி இணைப்பு, பொருளாதாரச் சரிவை எப்படி மீட்டெடுக்கும்? யாரைச் சரிவிலிருந்து மீட்டெடுக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது? நிச்சயமாக சிறு குறு தொழில் செய்பவர்களை மீட்டெடுப்பதற்காக இந்த வங்கிகள் இணைப்பு நடைபெறவில்லை. கிராமப் புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பயன் படும் வகையில் இந்த வங்கிகள் இணைப்பு ஒருபோதும் இருக்காது.

"வங்கிகளை இணைப்பதன் மூலம் பெரிய வங்கிகள் உருவாக்கப்பட்டு, கடன் கொடுக்கும் அளவு உலகின் மற்ற பெரிய வங்கிகளுக்கு நிகராக வளரும்" என்று வங்கிகள் இணைப்பிற்கான காரணத்தை அரசே கூறுகிறது.

உலகின் பெரிய வங்கிகளுக்கு இணையாக கடன் வழங்கும் நிலைக்கு இந்திய வங்கிகள் வளருவதால் பயன்பெறப்போவது பெருநிறுவனங்களன்றி வேறு யார்? பெருநிறுவனங்களுக்குக் கடன் கொடுப்பதால் மட்டுமே நாட்டின் பொருளாதாரம் வளர்ந்துவிடும் என்று இந்த அரசு நினைக்கிறது. இது போன்ற பெரிய வங்கிகளில் பெருநிறுவனங்கள் பெருந்தொகையைக் கடனாக எளிதில் பெறுவதற்கான வழிகள் இருக்கின்றன. ஆனால் ஏழை மக்கள் சிறு தொழில், விவசாயம் போன்றவற்றிற்கு இந்த வங்கிகளிடமிருந்து எளிதில் கடன் பெற்றுவிட முடியுமா?

பெருநிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட பெருந்தொகையிலான கடன்கள் எல்லாம் வாராக் கடன்களாக மாற்றப்பட்டன. சிறு குறு தொழில் செய்வோருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டனர்.

வங்கிகளின் கிளைகளை ஊர்கள் தோறும் அதிகப்படுத்தி மக்கள் கடன் பெறும் வசதியை எளிமைப்படுத்த வேண்டிய நேரத்தில், அதற்கு மாறாக அரசு செயல்பட்டிருக்கிறது. மீண்டும் கிராமப்புற ஏழை எளிய மக்களை, சுயதொழில் செய்வோரை கந்துவட்டிக் காரர்களிடம் சிக்க வைத்து அவர்கள் வாழ்க்கையைப் பறிக்கும் நிலையை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இப்போது இணைக்கப்பட்டுள்ள வங்கிகளால் பெரும்பாலும் தென்மாநிலங்களே பாதிக்கப்படுகின்றன.

"வடநாட்டாரிடம் பெரிய வங்கிகளின் சூத்திரக்கயிறு இருப்பதால் அவர்களால்தான் அந்த இயந்திரத்தை ஆட்டி வைக்க முடியும்" என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். அதன்படியே இப்போது தென்னாட்டில் பல்வேறு சிறிய வங்கிகளை ஒன்றிணைத்து அதனைப் பெரிய வங்கியாக மாற்றி அதன் சூத்திரக்கயிற்றை வடநாட்டவர் வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடாகவே இந்த இணைப்பு இருக்கிறது.

தமிழ்நாட்டில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்தியன் வங்கியினைக் கொல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள வடநாட்டு வங்கியுடன் இணைப்பதான அறிவிப்பு தமிழ்நாட்டு வங்கியின் சேவைப் பயன்பாட்டை பாதித்திடும் முயற்சியாகவே இந்த இணைப்பு கருதப்பட வேண்டி உள்ளது. இதே அச்சத்தை மேற்கு வங்க முதல்வர் மம்தா பேனர்ஜியும் தெரிவித்துள்ளார். பிரதமருக்கு உடனடியாகக் கடிதம் எழுதி இந்த முயற்சியைத் திரும்பப்பெற வலியுறுத்தியுள்ளார். ஆனால் இங்குள்ள ஆட்சியாளர்கள், அவர்களின் பங்காளிகளாகப் பதவியையும் அதிகாரத்தையும் ருசித்து வருகின்றனர்.

இவை எல்லாவற்றையும் விட பொதுத்துறையை ஒட்டுமொத்தமாகத் துடைத்து எறியும் மத்திய அரசு முயற்சிகளில் இதுவும் ஒன்று. சமூகநீதியை இந்த நாட்டில் ஓரளவுக்கு நிலைநாட்டுவது பொதுத்துறைதான். பொதுத்துறை இருக்கிற வரைக்கும் அவர்களால் சாணக்கிய நீதியை நிலைநாட்ட முடியாது. அதனால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தனியார் வசம் அனைத்தையும் தந்துவிடத் தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

நடிகர் சிலம்பரசன் திரைப்படம் ஒன்றில் 40,000 ரூபாய் கடன் பெறுவதற்காக 40,000 பேரிடம் ஒரு ரூபாய் பெற்றால் என்ன என்று சிந்திப்பார். அதைப் போலவே பெருநிறுவனங்களுக்குப் பெருந்தொகை தேவைப்படுகிறது. வங்கிகள் சின்னச் சின்னதாக இருந்தால் ஒவ்வொரு வங்கியிடமும் ஒவ்வொரு ரூபாயாகப் பெறுவது வேறு மாதிரி இருக்கும் அல்லவா? அதனால் எல்லா வங்கிகளையும் ஒன்றிணைத்து அரசே அவர்கள் கடன் பெறுவதை எளிமையாக்கிவிட்டிருக்கிறது.

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,